Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 சென்னை | தினசரி | 4 பக்கம் புதன்கிழமை, அக்டோபர் 04, 2023 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 82

## உலகமே பாராட்டும் லட்சிய தாலுகா திட்டம்: பிரதமர் மோடி உறுதி

சென்னை, அக்டோபர் 04 2023: கிராம வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என உறுதியாக நம்பிய மகாத்மா காந்தியின் கனவு நனவாக 'லட்சிய மாவட்ட'த் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார் பிரதமர் மோடி.

இந்தியாவின் மிகச் சிறந்த 10 முதன்மைத் திட்டங்களில் இதுவும் ஒன்றாக உயர்ந்து வருவதாகவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2018-ம் ஆண்டில் லட்சிய மாவட்டங்கள் திட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தியது. இதன்மூலம் நாடு முழுவதும் 112 பின்தங்கிய மாவட்டங்கள் கண்டறியப்பட்டு அந்த மாவட்டங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. லட்சிய மாவட்டங்கள் திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து கடந்த 2022-ம் ஆண்டு ஜனவரியில் லட்சிய தாலுகா திட்டத்தை மத்திய அரசு தொடங்கியது.

இதன்படி நாடு முழுவதும் 27 மாநிலங்கள், 4 யூனியன் பிரதேசங்களை சேர்ந்த பின்தங்கிய 500 தாலுகாக்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த தாலுகாக்களின் வளர்ச்சிக்காக சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் மட்டும் 16 தாலுகாக்கள் இந்தத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. லட்சிய தாலுகா திட்டம் தொடர்பான 'சங்கல்ப் சப்தாஹ்' (தீர்மான வாரம்) என்ற சிறப்பு மாநாடு டெல்லியில் நேற்று தொடங்கியது. வரும் 9-ம் தேதி வரை ஒரு வாரம் நடைபெறும் இந்த மாநாட்டில் லட்சிய தாலுகா திட்டத்தின் வெற்றி, தோல்விகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட உள்ளது.



நாடு முழுவதும் இருந்து 3,000-க்கும் மேற்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். சுமார் 2 லட்சம் பேர் காணொலி வாயிலாக இணைந்துள்ளனர். டெல்லி பாரத மண்டபத்தில் நடந்த தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:ஶ்ரீ

லட்சிய தாலுகா திட்டத்தில் ஊராட்சிகள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன.

இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள உள்ளாட்சி பிரதிநிதிகள், அதிகாரிகள் இந்தியாவுக்கு மட்டுமல்ல; ஒட்டுமொத்த உலகத்துக்கும் வழிகாட்டுகின்றனர். மத்திய அரசின் லட்சிய மாவட்டங்கள் திட்டத்தால் நாடு முழுவதும் 112 மாவட்டங்கள் பலன் அடைந்துள்ளன. அந்த மாவட்டங்களை சேர்ந்த 24 கோடி மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. லட்சிய மாவட்டங்கள் திட்டத்தைப் போன்று லட்சிய தாலுகா திட்டமும் மிகப்பெரிய வெற்றி அடையும். கடைநிலை மக்களும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற லட்சியத்துடன் மத்திய அரசு செயல்படுகிறது.

இந்த திட்டம் வெற்றி அடைய அனைத்து மாநில அரசுகளும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். சுதந்திர இந்தியாவின் மிகச் சிறந்த 10 திட்டங்களில் லட்சிய தாலுகா திட்டமும் இடம்பெறும் என்று உறுதியாக நம்புகிறேன். மத்திய அரசு துறைகள் நாட்டின் பின்தங்கிய 100 தாலுகாக்களை கண்டறிந்து அந்த தாலுகாக்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும்.

இதேபோல மாநில அரசுகள், தங்கள் மாநிலங்களில் உள்ள மிகவும் பின்தங்கிய 100 கிராமங்களைக் கண்டறிந்து, அவற்றை மேம்படுத்த முன்மாதிரி திட்டத்தை உருவாக்க வேண்டும். அடுத்த கட்டமாக 1,000 கிராமங்களை கண்டறிந்து அந்த கிராமங்களை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும். வரும் 2047-ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும். அதற்கு நகரங்கள் மட்டுமன்றி அனைத்து கிராமங்களும் வளர்ச்சி அடைய வேண்டும். நாட்டின் 140 கோடி மக்களும் முன்னேற வேண்டும். வளர்ச்சி பணிகளுக்கு அரசை மட்டுமே நம்பியிருக்கும் மனநிலையில் இருந்து மக்கள் வெளியே வர வேண்டும். அந்தந்த பகுதி பொதுமக்கள் அவரவர் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். 2024-ம் ஆண்டில் மத்தியில் பாஜக மீண்டும் ஆட்சி அமைக்கும். அடுத்த ஆண்டு அக்டோபர், நவம்பரில் நடைபெற உள்ள லட்சிய தாலுகா திட்ட மாநாட்டில் மீண்டும் உங்களை சந்திப்பேன். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

செப்டம்பர் 30 முதல் ஒரு வாரம் நடைபெறும் இத்திட்டத்தை வருடம் முழுவதும் சிறப்பாக செயல்படுத்த வேண்டிய முக்கிய பங்காற்றல் கிராம சபை பிரதிநிதிகள் கையில் தான் இருக்கிறது!

## பிரதமர் மோடி பி பி சி எல் இன் கிருஷ்ணப்பட்னம் - ஹைதராபாத் மல்டி ப்ராடக்ட் பெட்ரோலியம் பைப்லைன் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார்




சென்னை, அக்டோபர் 04 2023: பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க உள்கட்டமைப்புத் திட்டமான கிருஷ்ணப்பட்னம் முதல் ஹைதராபாத் வரையிலான ஹைதராபாத் மல்டி-புராடக்ட் பைப்லைன் திட்டத்துக்கு மாண்புமிகு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டினார். தெலுங்கானாவில் உள்ள முபாரக்பூரில் இந்த அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

ரூ.1,932 கோடி மதிப்பிலான இந்த திட்டம், அக்டோபர் 2025க்குள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் நேரடியாகவும் மறைமுகமாகவும் மொத்தம் 13 லட்சத்துக்கும் அதிகமான மனித நாள் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு குறிப்பிடத்தக்க வகையில் பங்களிப்பை வழங்கும். மல்காபூர் இல் உள்ள இந்த பைப்லைன் மற்றும் பி ஓ எல் டெர்மினல் செயல்பாட்டுக்கு வந்தவுடன் தோராயமாக 650 நபர்களை வேலைக்கு அமர்த்தும்.

மல்காபூரில் உள்ள சேமிப்பு முனையம் மற்றும் இந்த கிருஷ்ணப்பட்னம்-ஹைதராபாத் மல்டி ப்ராடக்ட் பெட்ரோலியம் பைப்லைன் ஆகியவை தெலுங்கானா மாநிலத்தில் அதிகரித்து வரும் பெட்ரோலியப் பொருட்களுக்கான தேவையை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும். மேலும், இந்த குழாய் வழி செல்லும் மாவட்டங்களில் சமூக-பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு இது தயாராக உள்ளது.

இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக தற்போதைய கிருஷ்ணப்பட்னத்தில் உள்ள முனையத்தில் தேக்க கொள்ளளவு, குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு உள்ளாகி, 100,000 கிலோலிட்டரிலிருந்து 164,000 கிலோலிட்டராக அதிகரிக்கும் இந்த குழாய் வழி ஒரு 425 கிலோமீட்டர் நீளத்தைக் கொண்டுள்ளது மற்றும் ஆண்டுக்கு 2.6 மில்லியன் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது கிருஷ்ணப்பட்னத்தில் உள்ள பிபிசிஎல் இன் பி ஓ எல் முனையத்திற்கும் ஹைதராபாத் அருகே அமைந்துள்ள மல்காபூர் இல் உள்ள அதிக திறன் கொண்ட பெட்ரோலிய சேமிப்பு முனையத்திற்கும் இடையே ஒரு முக்கிய இணைப்பை நிறுவும்.

நிகழ் நேர கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்துதலுக்கான மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்துதல் மற்றும் பைப்லைன் ஊடுருவல் கண்டறிதல் அமைப்பு உள்ளிட்ட மேம்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை இந்த பைப்லைன் உள்ளடக்கியுள்ளது.

இது 200 டேங்க் வேகன்கள் மற்றும் டேங்க் லாரிகளின் தேவையை நீக்குவதன் மூலம் கார்பன் தடயத்தை குறிப்பிடத்தக்க வகையில் குறைக்கும், இவ்வாறாக ஒரு தூய்மையான மற்றும் நிலையான எதிர்காலத்திற்கு பங்களிக்கும்.

இந்த நினைவில் நிற்கும் திட்டம், உள்கட்டமைப்பு வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை வளர்ப்பதில் இந்திய அரசின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.




இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# தமிழ்நாடு பொம்மை வியாபாரிகள் சங்கம் நடத்தும் பொம்மை கண்காட்சி



சென்னை, அக்டோபர் 04 2023: தமிழ்நாடு பொம்மை வியாபாரிகள் சங்கம் நடத்தும் பொம்மை கண்காட்சி சென்னை டிரேட் சென்டரில் துவங்கியது. இந்தியா கண்காட்சியைதமிழ்நாடு பொம்மை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் சந்தோஷ்குமார், செயலாளர் ஜெய்சங்கர், துணை தலைவர் வினய்குமார், பொருளாளர் ரோகேஷ் ஜெயின் ஆகியோர் துவக்கி வைத்தனர். தமிழ்நாடு பொம்மை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் சந்தோஷ்குமார் பேசுகையில் 'தமிழ்நாடு பொம்மை வியாபாரிகள் சங்கம் 9 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது. 45 உறுப்பினர்களுடன் கொண்ட இந்த சங்கம் புதுதில்லியில் உள்ள டாய் அசோசியேஷன் ஆஃப் இந்தியா அமைப்புடன் இணைத்துள்ளது. வர்த்தகத்தை எளிதாக்குவதற்காக,பான் இந்தியாவைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்துவதற்காக வருடாந்திர கண்காட்சிகளை நடத்துகிறோம். மாநிலம் முழுவதும் உள்ள சில்லறை விற்பனையாளர்கள் எக்ஸ்போவிற்கு அழைக்கப்படுகிறார்கள். 6 ஆண்டுகளாக நாங்கள் டேபிள் மற்றும் நாற்காலி கொண்டு 35 ஸ்டால்கள் கொண்ட எக்ஸ்போ நடத்தினோம். அதன் பிறகு ஹோட்டல் பெத்தேர்ஸ்ல் 55 ஸ்டால்கள் நடத்தினோம். கடந்த ஆண்டு நாங்கள் 4400 சதுர மீட்டர் பரப்பளவில் சென்னை வர்த்தகமையத்திற்கு பொம்மை கண்காட்சியை நடத்தினோம். இது இந்தியா முழுவதிலுமிருந்து140 கண்காட்சியாளர்களுடன் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. இந்த ஆண்டு அதே 4400 சதுரமீட்டர் பரப்பளவில் எங்களிடம் பல ஸ்டால்கலை கொண்டு நடத்துகிறோம். நாட்டில் தரமான பொம்மைகளின் உற்பத்தி வேகமாக வளர்ந்து வருவதால் அடுத்த ஆண்டு இருமடங்கு அளவில் நடத்த உள்ளோம். எங்கள் நட்சத்திர வாடிக்கையாளர்களில் சரவணாஸ், போத்திஸ், சென்னைசில்க்ஸ், ஜெயச்சந்திரா, ஆர்எம்கேவி மற்றும் பலர் உள்ளனர்.

# பிரமிப்பூட்டும் நட்சத்திரங்களுடன் லைகா புரடக்சன்ஸ் தயாரிக்கும் 'தலைவர் 170' படப்பிடிப்பு திருவனந்தபுரத்தில் துவங்கியது










சென்னை, அக்டோபர் 04 2023: அனைத்து தரப்பு பார்வையாளர்களையும் கவரும் விதமான பிளாக் பஸ்டர் வெற்றிப்படங்களை தயாரிப்பதற்காகவே பெயர்பெற்ற நிறுவனமான லைகா புரோடக்ஷன்ஸ், தொடர்ந்து உற்சாகமான அறிவிப்புகளை கொடுத்து வரும் நிலையில், இந்த மாதத்தில் 'தலைவர் 170' பற்றிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. சமூக நோக்கிலான கருத்து கொண்ட படங்களுக்காக அறியப்படும் இயக்குநர் டி ஜெ ஞானவேல் முதன்முறையாக சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் படத்தை இயக்குகிறார். 2.ஒ, தர்பார் மற்றும் லால் சலாம் படங்களை தொடர்ந்து சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் மற்றும் லைகா புரொடக்சன்ஸ் கூட்டணியில் நான்காவதாக உருவாகும் 'தலைவர் 170' ஒரு பான் இந்தியா திரைப்படமாக தயாராகிறது.

பேட்ட, தர்பார் ஹிட் படங்களுடன் சமீபத்திய ஜெயிலர் படத்தின் வெற்றியை தொடர்ந்து 'தலைவர் 170' படத்திற்காக சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் மற்றும் அனிருத் இருவரும் நான்காவது முறையாக ஒன்றிணைந்து பணியாற்ற உள்ளனர்.

இப்படத்தை 'டாக் ஆப் தி டவுன்' ஆக மாற்றுவதற்கான முயற்சியில் தயாரிப்பளார் சுபாஸ்கரன் எந்த ஒரு வாய்ப்பையும் நழுவ விட போவதில்லை. குறிப்பாக இந்தப்படத்திற்கான தனித்துவம் வாய்ந்த நடிகர்கள் குறித்த அடுத்தடுத்த தொடர் அறிவிப்புகளை அதிரடியாக வெளியிட்டு வருகிறார்கள். மீடியாக்கள் எதிர்பார்த்ததை போல பாலிவுட் மெகாஸ்டார் அமிதாப் பச்சன் அவர்கள் " அந்தா கனூன், கிராப்தார் மற்றும் ஹம் " ஆகிய படங்களை தொடர்ந்து நான்காவது முறையாக இப்படத்தில் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் இருவரும் திரையில் இணைகிறார்கள்.

மஞ்சு வாரியர், பஹத் பாசில், ராணா டகுபதி, ரித்திகா சிங் மற்றும் துஷாரா விஜயன் ஆகியோரும் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்துடன் முதன்முறையாக நடிக்கிறார்கள். 'தலைவர் 170' படப்பிடிப்பு தற்போது திருவனந்தபுரத்தில் பிரமிக்க வைக்கும் நட்சத்திரங்களுடன் துவங்கியுள்ளது. நடிகர்கள்

சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த், அமிதாப் பச்சன், பஹத் பாசில், ராணா டகுபாட்டி, மஞ்சு வாரியர், ரித்திகா சிங், துஷாரா விஜயன் மற்றும் பலர் நடிக்கிறார்கள்

தொழில்நுட்ப கலைஞர்கள்

தயாரிப்பு ; லைகா புரடக்சன்ஸ், எழுத்து இயக்கம் ; டி ஜெ ஞானவேல், இசை - அனிருத், ஒளிப்பதிவு - எஸ் ஆர் கதிர், படத்தொகுப்பு - பிலோமின் ராஜ், கலை இயக்குனர் - கே கதிர், சண்டை பயிற்சி - அன்பறிவ், ஒப்பனை - பானு ( ரஜினிகாந்த் ), ஆடை வடிவமைப்பாளர் - அனு வர்தன், லைகா புரொடக்ஷன்ஸ் தலைமை அதிகாரி - ஜி கே எம் தமிழ் குமரன், மக்கள் தொடர்பு ; ரியாஸ் கே.அஹ்மத்.

# ஏர் இந்தியா எக்ஸ்ப்ரஸ் தனது சேவை விமாங்கள் னவரிசையை மேலும் பிரம்மாண்டமாக விரிவாக்கம் செய்யும் வகையில் இரண்டு போயிங் 737 மேக்ஸ்-8 விமானங்களை இணைத்திருக்கிறது!

சென்னை, அக்டோபர் 04 2023: □ ஏர் இந்தியா எக்ஸ்ப்ரஸ், தனது விமான சேவையை மேலும் விரிவுப்படுத்தும் வகையில், முதல் இரண்டு புதிய போயிங் 737 மேக்ஸ் - 8 விமானங்களை அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள போயிங் உற்பத்தி ஆலையில் இருந்து பெற்றுக்கொண்டது. இந்த மைல்கல் தொடக்கமானது, ஏர் இந்தியா குழுமம் மேற்கொண்ட முக்கியத்துவம் வாய்ந்த ஆர்டரின் மூலமாக, போயிங் நிறுவனத்தில் இருந்து விமான விநியோகம் ஆரம்பமாகி இருப்பதைக் குறிப்பிடுவதாக அமைந்திருக்கிறது.

இந்த இரண்டு போயிங் 737-8 விமானங்களும், சிறப்பான எரிபொருள் திறன் மொண்டவை, அதிநவீன தொழில்நுட்பத்தில் மேம்பட்டவை, அவற்றின் ஈடுஇணையில்லாத செயல்திறன் மற்றும் சௌகரியங்களுக்காக உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இம்விமானங்களில் பயணிக்கும் விருந்தினர்களுக்கு, எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமின்றி மேம்பட்ட பயண அனுபவத்தை ஏர் இந்தியா எக்ஸ்ப்ரஸ் வழங்கும். மேலும் ஏர் இந்தியா எக்ஸ்ப்ரஸ் நிறுவனம், தனது உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான சேவை செயல்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு இந்த சேவை விமான அணிவகுப்பு உதவும்.

737 மேக்ஸ்-8 விமானம், சுற்றுச்சூழலுக்கு உகந்த, நீடிக்கத்தக்க செயல்பாடுகளை நோக்கிய பயணத்தில் அடுத்தக்கட்டத்தை முன்னெடுப்பதை குறிப்பிடுவதாக அமைந்திருக்கிறது. குறிப்பாக இதற்கு முந்தைய மாடல்களுடன் ஒப்பிடுகையில், இவ்விமானங்கள் தனது மேம்பட்ட தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் ஆற்றல் மிக்க என்ஜின்களின் மூலம் 20% என்ற அளவில் குறைவான எரிபொருள் பயன்பாடு மற்றும் குறைந்த உமிழ்வைக் கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் பழைய மாடல்களுடன் ஒப்பிடும்போது ஒலி மாசுபாட்டு அளவை 50% கணிசமாகக் குறைக்கிறது. அத்துடன் ஏர்ஃப்ரேம் பராமரிப்பு செலவுகளையும் 14 சதவீதம் வரை குறைக்கிறது.

இந்த மாத தொடக்கத்தில், ஏர் இந்தியா எக்ஸ்ப்ரஸ் நிறுவனம் தற்போது ஏர்ஏசியா இந்தியாவாக இயங்கி வரும் ஏஐஎக்ஸ் கனெக்ட் உடன் கையகப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் உருவாக்கப்படும் நிறுவனத்திற்கான தொலைநோக்குப் பார்வையை வெளியிட்டது. இந்த இரு விமான நிறுவனங்களும் தங்களது ஒருங்கிணைந்த நெட்வொர்க்கில் 100-க்கும் மேற்பட்ட வழித்தடங்களை உள்ளடக்கிய இன்டர்லைன் செயல்பாடுகளையும் தொடங்கின. 56 சேவை விமானங்களின் அணிவரிசையுடன், இந்த இரண்டு விமான நிறுவனங்களும் இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் 250 வழித்தடங்களில் மேற்கொள்ளும் சேவைகளின் மூலம் 44 இடங்களை தங்குதடையின்றி இணைக்கின்றன. கையகப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்புக்கு முன், செயல்பாட்டு யுக்திகளின் மீதான சீரமைப்பு மூலம், விமான நிறுவனங்கள் தங்கள் சலுகைகளில் கூடுதலாக வழங்கப்படும் துணை சேவைகள் மற்றும் தயாரிப்புகளின் வரிசையை ஒருங்கிணைத்துள்ளன. இதில் விமானத்தில் பயணிக்கும் போதே அருஞ்சுவை உணவு வகைகளை ருசிக்க உதவும் கொரும்ஏர் இன்-பிளைட் டைனிங் மெனு, தங்களது விருப்பத்திற்க்கு ஏற்ற வகையில் இருக்கையைத் தேர்ந்தெடுத்து பயணிக்க எக்ஸ்பிரஸ் பிரைம் சீட்டிங் ப்ரீமியம் வசதி மற்றும் முன்னுரிமை சேவைகளைப் பெற எக்ஸ்பிரஸ் அகெட் பிரியாரிட்டி சர்வீசஸ் ஆகியவை இதில் அடங்கும். இவை அனைத்தும் விருந்தினர்களின் பயண அனுபவத்தை மிகவும் மேம்பட்டதாக உணரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் மற்றும் ஏர்ஏசியா இந்தியா, இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்ட இணையதளமான airindiaexpress.com <https://www.airindiaexpress.com/home> என்ற இணைய முகவரியில் இயங்கி வருகின்றன. இந்த இணைய முகவரி, விருந்தினர்கள் தங்களுக்கு அவசியமான முன்பதிவு, சேவைகள் நிர்வகிக்கும் வாய்ப்புகள், விமான பயணத்திற்கான செக்-இன் சேவை, ஆகியவற்றை உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான வழித்தடங்களில் ஒருங்கிணைந்த விருந்தினர் சேவை செயல்பாட்டு வழிமுறைகளின் மூலம் வழங்கி வருகிறது.

# டாடா கேபிடல் தனது விளம்பர தூதுவரான ஷுப்மான் கில் நடிப்பில் 'குப்சூரத் சிந்தா' என்ற புதிய பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது!

சென்னை, அக்டோபர் 04 2023: டாடா குழுமத்தின் முதன்மை நிதிச் சேவை நிறுவனமான டாடா கேபிடல், தனது விளம்பர தூதுவரான ஷுப்மான் கில் இடம்பெறும் புதிய பிரச்சாரம் ஒன்றை அறிமுகப்படுத்தி இருக்கிறது. இந்த புதிய பிரச்சாரமானது, வாடிக்கையாளர்கள் தங்களது வாழ்வில் சில அர்த்தமுள்ள, முக்கியமான தருணங்களைக் கொண்டாடவும், அக்கறை காட்டுவதிலும், போதுமான நேரம் இல்லாமல் போவதையும், வாழ்க்கைப் பயணத்தில் நிதிச்சார்ந்த கவலைகள் எல்லாவற்றையும் விட முன்னுரிமை பெறுவதையும் சுட்டிக்காட்டும் நுண்ணறிவு தகவல்களை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் தங்களது நிதி சார்ந்த கவலைகள் அனைத்தையும் அக்கறையுடன் கவனித்துக்கொள்வதற்கும், தங்களது வாழ்வின் அர்த்தமுள்ள முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்துவதற்கும் டாடா கேப்பிடல் உடன் கைக்கோர்க்கும்படி இந்த பிரச்சாரம் வாடிக்கையாளர்களை வலியுறுத்துகிறது (இதைதான் 'குப்சூரத் சிந்தா' என்று அழைக்கிறார்கள்). இந்தியாவின் எதிர்பார்புகளையும், லட்சியங்களையும் நிறைவேற்றும் பொறுப்புமிக்க ஒரு நிதிச்சேவை பங்குதாரர் ஆக இருக்க வேண்டுன்ற நோக்கத்தை டாடா கேபிடல் ப்ராண்டின் உன்னதமான நோக்கத்தை இந்த பிரச்சாரம் வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்க்கும்.

இந்த புதிய பிரச்சாரம் 5 படங்கள், ஒரு முக்கிய ப்ராண்ட் படம் மற்றும் தயாரிப்புகளைப் பற்றிய 4 குறும்படங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கிறது. இப்பிரச்சாரத்தில் இடம்பெற்றிருக்கும், ப்ராண்ட் திரைப்படமானது ஷுப்மானின் சொந்த வாழ்க்கைப் பயணத்தில், அவரது தந்தை எப்படி ஷுப்மானின் அனைத்து தேவைகளையும் அக்கறையுடன் கவனித்துக்கொண்டு, ஷுப்மானின் கவனம் முழுவதையும் கிரிக்கெட் விளையாட்டில் செலுத்த உதவினார் என்பதையும், இந்திய கிரிக்கெட் அணிக்காக விளையாட வேண்டும் என்ற ஷுப்மானின் குப்சூரத் சிந்தாவை அடைய கைக்கொடுத்தார் என்பதையும் உணர்த்தும் விதமான படைப்பாக அமைந்திருக்கிறது. உணர்ச்சிகரமான இந்த பிரச்சாரம், ஷுப்மானின் சாதனைகள் மற்றும் அவரை வெற்றிக்கான பாதையில் வழிநடத்துவதில் அவரது தந்தையின் மகத்தான பங்கு ஆகியவற்றை மனதைத் தொடும் உணர்வுப்பூர்வமான கதை மூலம் விவரிக்கிறது. இதேபோலவே டாடா கேபிடல் எவ்வாறு தனது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கனவுகள், எதிர்பார்புகள் மற்றும் விருப்பங்களை அடைய உதவுகிறது என்பதை அழகியலுடன் உணரவைப்பதாகவும் இப்படைப்பு அமைந்திருக்கிறது. கிரிக்கெட் உலகில் ஷுப்மானின் வெற்றிகரமான பயணம், நிதிச் சேவைத் துறையில் டாடா கேபிடலின் அபாரமான வளர்ச்சி பயணத்தையும் பிரதிபலிக்கிறது. டாடா கேபிடலின் இந்த வளர்ச்சியானது, வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிக்க வேண்டுமென கொண்டிருக்கும் அக்கறை, ஆர்வம், திறமைமிக்க ஆற்றல் மற்றும் சிறப்பான சேவைகளை அளிப்பதில் கொண்டிருக்கும் நிபுணத்துவம் ஆகியவற்றால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் கூடுதலாக, தயாரிப்புகளைப் பற்றிய நான்கு குறும்படங்களின் தொகுப்பு (இரு சக்கர வாகனக் கடன், வீட்டுக் கடன், தனிநபர் கடன் மற்றும் வணிகக் கடன் - டாடா கேபிடலில் இருந்து தடையற்ற, சௌகரியமான செயல்முறைகளின் மூலம் உடனடியாக கடன்வசதிகளைப் பெறுவதைக் கருப்பொருளாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. கடன்வசதிகளை எளிதாக பெற முடிவதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்களது 'குப்சூரத் சிந்தா'வில் கவனம் செலுத்த கைக்கொடுக்கிறது என்ற அதே கருப்பொருளில் இந்தப் படங்களும் அமைந்திருக்கின்றன. புதிய பிரச்சாரம் 5 முதல் 6 வாரங்கள் வரை தொடரும். மேலும் மற்றும் டிவி, ஓ ஓ எச், அச்சு, சமூக ஊடகங்கள் மற்றும் பிற டிஜிட்டல் தளங்களில் இப்பிரச்சாரம் இடம்பெறும்.

இப்பிரச்சாரம் பற்றிப் டாடா கேபிடலின் டிஜிட்டல் மற்றும் மார்க்கெட்டிங் பிரிவு தலைமைச் செயல் அதிகாரி திருமதி. அபோந்தி பானர்ஜி பேசுகையில், "எங்கள் வாடிக்கையாளர்களின் நிதிச்சார்ந்த பயணத்தில் டாடா கேபிடலை ஒரு அவர்களின் லட்சியங்களை, கனவுகளை சாத்தியமாக்கும் ஒரு உற்ற துணையாக சித்தரிப்பதோடு, வாடிக்கையாளர்கள் தங்களது வாழ்க்கையின் அழகான தருணங்களில் கவனம் செலுத்த உதவுகிறது என்பதே இப்பிரச்சாரத்தின் முக்கிய சாராம்சமாகும். அதே சமயம். குப்சூரத் சிந்தா என்பது ஒரு புதிய வீட்டின் வண்ணங்கள் அல்லது திருமணத்திற்கான இடம் போன்றவற்றை பற்றி நாம் சிந்திப்பது போன்ற அழகிய 'கவலைகள்' ஆகும். நம்முடைய நிதிச்சார்ந்த கவலைகள் எல்லாம் அவற்றுக்கான தீர்வுகளுடன் நிறைவேறும்போது வாழ்க்கையில் அர்த்தமுள்ள விஷயங்களில் ஒருவர் எவ்வாறு கவனம் செலுத்தலாம் என்பதற்கான உருவகமாக ஷுப்மானின் வாழ்க்கைக் கதையை இப்பிரச்சாரம் படைப்பியலுடன் வெளிப்படுத்துகிறது.'' என்றார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

# தமிழ்த் திரைப்பட நடப்புத் தயாரிப்பாளர் சங்க வருடாந்திர பொதுக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பெற்ற சில முடிவுகள்



சென்னை, அக்டோபர் 04 2023: 1. தற்போது தமிழகத்தில் வார நாட்களில் காலை ஒன்பது மணி முதல் இரவு ஒன்றரை மணிவரை நான்கு காட்சிகள் மட்டுமே திரையிட வேண்டும் என்கிற விதி நடைமுறையில் உள்ளது. இது ஐம்பது வருடங்களுக்கு முன்பு இயற்றப்பெற்ற ஒரு விதி (ஸிஷூற்மீ) என்பதை பதிவு செய்ய விரும்புகிறோம். இத்தனை காலமாற்றம் நிகழ்ந்த பின்பும் காலை ஒன்பது மணி முதல் இரவு ஒன்றரை மணிவரை ஒரு தனித்திரையரங்கில் நான்கு காட்சி மட்டுமே திரையிடப்பட வேண்டும் என்கிற விதி காலாவதியான ஒன்றாக இருப்பதனால், குறைந்தபட்சம் ஐந்து காட்சிகளை இயக்கிக்கொள்ளத் திரையரங்குகளுக்கு அனுமதி வழங்கத் தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம். அதன் மூலம், மேலும் ஒரு காட்சி பல திரைப்படங்களுக்கும், பார்வையாளர்களுக்கும் கிடைக்கும். திரையரங்குகளும் அதன் மூலம் பயனடையும். இதற்கான அனுமதியை தமிழக அரசு வழங்க வேண்டும் என்று இந்த பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

2. சில மாதங்களுக்கு முன்பு, சென்னையில் ஒரு திரைப்பட நகர் உருவாக்கவும், தரமணியில் ஏற்கனவே இயங்கி வரும் திரைப்பட நகரில் கூடுதல் தளங்களை ஏற்படுத்தித் தருகிறோம் என்கிற அறிவிப்பு தமிழக அரசின் சார்பில் வெளியிடப்பட்டது. அந்த அறிவிப்புக்கு இந்த பொதுக்குழு நன்றியை தெரிவிக்கும் நேரத்தில் அத்தகைய புதிய திரைப்பட நகர் மற்றும் தரமணியில் கூடுதல் தளங்கள் அமைக்கும் பணி கூடிய விரைவில் தொடங்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு இந்த பொதுக்குழு சார்பில் கோரிக்கை வைக்கிறோம்.

3. சென்னையில் ஐம்பதாயிரம் பேர் அமரும் வகையில் விளையாட்டரங்கம் உள்ளது. ஆனால், ஒரு பெரிய கலை நிகழ்வு நடக்கும் வகையில் கலையரங்கம் சென்னையில் இல்லாதது சினிமா மற்றும் பொழுதுபோக்கு துறைகளுக்கு சிக்கல்களைத் தருகிறது. குறைந்தபட்சம் இருபத்தைந்தாயிரம் நபர்கள் அமரும் வகையில் ஒரு கலையரங்கம் தமிழக அரசால் அமைக்கப்பெற்றால் இசைவெளியீட்டு விழா, கலை நிகழ்ச்சிகள், இசை கச்சேரிகள் மற்றும் இதர சினிமா மற்றும் பொழுதுபோக்கு துறை சார்ந்த நிகழ்வுகள் நடத்தவும் எளிதாக அமையும். அதற்கான வழிவகுப்பு செய்து, விரைவில் அத்தகைய ஒரு கலையரங்கம் அமைக்க ஏற்பாடுகள் செய்யுமாறு தமிழக அரசை இந்த பொதுக்குழு சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

4. தமிழ்நாட்டில் ஆயிரத்து நூற்றைம்பது திரையரங்கம் உள்ளது. அவற்றை ஒருங்கிணைத்து பாக்ஸ் ஆஃபிஸ் வசூலில் ஒரு வெளிப்படைத் தன்மைக் கொண்டு வர ஒருங்கிணைக்கப்பட்ட மென்பொருளைக் கொண்டு ஒரு செண்ட்ரலைஸ்ட் பாக்ஸ்-ஆஃபிஸ் கலெக்□ஷன் டிராக்கிங் சிஸ்டம் வரவேண்டுமென்று முதலிலிருந்தே நடப்பு தயாரிப்பாளர் சங்கத்தின் மூலம் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அவ்வகையில் ஒருங்கிணைக்கப்பட்ட மென்பொருளைக் கொண்டு வரத் தமிழக அரசு ஆயத்தம் செய்து தரக் கேட்டுக்கொள்கிறோம்.

5. 2009 முதல் 2014 வரை தமிழக அரசிடம் இருந்து திரைத்துறைக்கான விருதும், சிறு பட்ஜெட் படங்களுக்கான மானியமும் வழங்கப்பட்டு வந்தது. அதன் பின் 2015 முதல் 2022 வரையில் ஏழு வருடங்களுக்கான தமிழக அரசின் விருதுகளும், மானியங்களும் வழங்க தமிழக அரசு ஏற்பாடு செய்து வருவதை இந்த பொதுக்குழு பாராட்டுகிறது. அதற்கான தேர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்கள் திரைப்படங்களை பார்த்து வருகிறார்கள் என்றும் அறிகிறோம். அந்த தேர்வுகள் வெகு விரைவில் முடிவு செய்யப்பட்டு ஏழு வருடங்களுக்கான தமிழக அரசின் விருதுகளும், சிறு பட்ஜெட் திரைப்படங்களுக்கான மானியங்களும் வெகு விரைவில் வழங்க வேண்டுமென தமிழக அரசை இந்த பொதுக்குழு வேண்டி கேட்டுக்கொள்கிறது.

6. தமிழ்நாட்டில் சிங்கிள் விண்டோ கிளியரன்ஸ் மூலம் திரைப்பட ஷூட்டிங்கிற்கு அனுமதி வழங்கவும், சென்னை நகரில் பகல் நேரத்தில் படப்பிடிப்பு நடத்த அனுமதி வேண்டி, ஒரு கோரிக்கையை சில மாதங்களுக்கு முன்பு நமது சங்கம் சார்பில் வைக்கப்பட்டது. அதற்காக, சென்னை நகரில் எந்தெந்த தெருக்கள் பகல் நேரத்தில் படப்பிடிப்புக்கு உகந்தது என்று ஆய்வு செய்யப்பட்டு விபரங்கள் கொடுக்கப்பட்டது. அந்த அனுமதியை விரைவில் தருமாறு தமிழக அரசை இந்த பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

7. தற்போது திறைத்துறைக்கு உள்ள தணிக்கைக்குழுவின் செயல்முறை மிகவும் கடினமாக உள்ளது. இங்கே ஒரு படம் திரையிடப்பட்டபின், நீக்கப்பட்ட காட்சிகளின் பட்டியலில் மும்பை அலுவலகத்திற்குச் சென்று ஒப்புதல் அளிக்கப்பட்டு மீண்டும் சென்னையில் அதன் ஒப்புதல் சரிபார்க்கப்பட்டு அதற்கான தணிக்கைச் சான்றிதழ் மறுமுறை மும்பை அலுவலகத்தில் ஒப்புதல் பெற்ற பின்னரே சான்றிதழ் வழங்கப்படுகிறது. இதற்கான காலநேரம் குறைந்தது ஐந்து பணி நாட்கள் ஆகிறது. இதன் வழிமுறையைச் சுருக்கி, மத்திய அரசு சென்னையில் தணிக்கைக்காகத் திரையிடப்படும் படங்களுக்கான நீக்கப்பட்ட காட்சிகளை ஒப்புதல், சரிபார்ப்பு போன்ற வழிமுறைகளை இங்கே உள்ள குழுவே செய்து முடித்து அதற்கான தணிக்கைச் சான்றிதழ்களை சென்னையிலேயே வழங்கினால் இரண்டு நாட்களுக்குள் தணிக்கைச் சான்றிதழ் வழங்க முடியும். தற்போது உள்ள விதிமுறையை மத்திய அரசு மாற்றி சென்னையில் உள்ள பிராந்திய தணிக்கை அலுவலகமே அனைத்து முடிவுகளையும் மேற்கொண்டு தணிக்கைச் சான்றிதழ் வழங்குவதற்கான வழிமுறைகளை உண்டாக்குமாறு இந்த பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

8. அடுத்தபடியாக சாடிலைட் மற்றும் ஒடிடி நிறுவனங்கள், நட்சத்திர நடிகர்களின் படங்களின் அறிவிப்பு வெளியான உடனே அவற்றை வாங்குவதற்குக் காட்டும் ஆர்வத்தினை சிறிய பட்ஜெட் படங்களுக்கும் காட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அதன் மூலம் பல சிறிய பட்ஜெட் திரைபடங்கள் பலன் அடைய முடியும். சிறிய பட்ஜெட்டில் நல்ல படங்களை வாங்க உங்களிடம் நிதி இல்லையென்றாலும், குறைந்தபட்சம் பே பர் வியூ முறையில் வெளியிட்டு வருமானத்தை ஈட்டி தந்தால் கூட அது தயாரிப்பாளர்களுக்கும் சிறிய பட்ஜெட்டில் வெளிவரும் நல்ல படங்களுக்கு காட்டும் ஆதரவாக அது இருக்கும். இதை அனைத்து சாடிலைட் மற்றும் ஒடிடி நிறுவனங்களும் செயல்படுத்துமாறு இந்த பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட இந்த கோரிக்கைகளை மத்திய அரசிற்கும், மாநில அரசிற்கும் மனுவாக அனுப்ப உள்ளோம் என்பதனை இந்த பொதுக்குழுவின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

# திருப்பதியில் அலைமோதும் கூட்டம்: இலவச தரிசனத்தில் 15 மணி நேரம் காத்திருக்கும் பக்தர்கள்



சென்னை, அக்டோபர் 04 2023: நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் சுமார் 15 மணி நேரம் காத்திருந்து திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்து வருகின்றனர்.

புரட்டாசி மாதம் அவருக்கு உகந்த மாதம் என்பதால் இந்த மாதத்தில் திருப்பதியில் தரிசனம் செய்வதற்கு ஏராளமான பக்தர்கள் குவிந்து வருகின்றனர்.

ரூ.300 ஆன்லைன் தரிசன டிக்கெட்டுகள் வரும் டிசம்பர் மாதம் வரை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் இலவச தரிசனத்தில் நேர ஒதுக்கீடு டிக்கெட் பெற பக்தர்கள் கூட்டம் அலைமோதி வருகிறது.

நேரடி இலவச தரிசனத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளதால் பக்தர்கள் வைகுந்தம் கியூ காம்ப்ளக்ஸ் அறைகளில் தங்க வைக்கப்பட்டு தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இன்று வைகுந்தம் கியூ காம்ப்ளக்ஸ் உள்ள 18 அறைகளில் பக்தர்கள் கூட்டம் நிரம்பியது.

இதனால் நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் சுமார் 15 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்து வருகின்றனர்.

திருப்பதியில் நேற்று 79,365 பேர் தரிசனம் செய்தனர். 25,952 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.4.77 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது.

# “சீயட் இந்தியன் சூப்பர் கிராஸ் ரேசிங் லீக் நிறுவனர்கள், லீக் ஐ வளர்ச்சி ஊக்கமளிக்க, அடுத்த 3 ஆண்டுகளில் 150 கோடி ரூபாய் முதலீட்டை முன்னெடுப்பார்கள் “




சென்னை, அக்டோபர் 04 2023: சீயட் இந்தியன் சூப்பர் கிராஸ் ரேசிங் லீக் அடுத்த மூன்று ஆண்டுகளில் சுமார் 150 கோடி ரூபாய் செலவாகும் ஒரு சாகச முதலீட்டு திட்டத்தை வெளியிட்டுள்ளது. இந்த கணிசமான நிதி உறுதியளிப்பு ஆனது, உலகத்தரம் வாய்ந்த பந்தய உள்கட்டமைப்பை உருவாக்குதல், அடிநிலை மேம்பாடு மற்றும் அடுத்த 3 ஆண்டுகளில் இந்தியா முழுவதும் உலகத்தரம் வாய்ந்த நிகழ்வுகள் நடைபெறுவதை உறுதி செய்வதை நோக்கிச் செல்லும். இந்தியாவில் உள்ள விளையாட்டு மற்றும் சாகச ஆர்வமுள்ள பார்வையாளர்களின் கற்பனையை ஈர்க்கும் வகையில், சந்தையை உருவாக்குவதிலும், மற்றும் இந்த லீக் ஐ மக்களிடம் கொண்டு செல்வதிலும் லீக் அதிக முதலீடு செய்யும்.

இந்த மூலோபாய முதலீட்டின் மூலம், மோட்டார்ஸ்போர்ட்ஸ் ரசிகர்களின் இதயங்களையும் மனதையும் கவரும் நோக்கத்துடன், இந்தியாவில் உலகளாவிய அளவிலான நிகழ்வை உருவாக்க மிஷிஸிலி நிர்ணயித்துள்ளது. இந்த முயற்சியானது, பாரத் மோட்டோஜிபி இன் சமீபத்திய வெற்றியின் தொடர்ச்சியாக வருகிறது, மேலும் இது மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஒரு அற்புதமான புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

கணிசமான முதலீட்டுடன், இந்த லீக், சூப்பர் கிராஸ் ஐ முதன்மை மோட்டார்ஸ்போர்ட் நிலைக்கு உயர்த்தி, ஒரு இன்னும் பரந்த பார்வையாளர்களுக்கு அதை அறிமுகப்படுத்துகிறதில், இந்த நிகழ்வின் அபரிமிதமான புகழ் மற்றும் உற்சாகத்தைப் பயன்படுத்தத் தயாராக உள்ளது. சூப்பர் கிராஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் இன் இணை நிறுவனர் மற்றும் இயக்குனர் திரு. வீர் படேல், "எங்கள் அர்ப்பணிப்பு பந்தயப் பாதைக்கு அப்பால் நீண்டுள்ளது; இது இந்தியாவில் சூப்பர் கிராஸ் பந்தயத்தை உலக அரங்கிற்கு கொண்டுசெல்வதற்கான ஒரு இணையற்ற நிகழ்வாக மறுவரையறை செய்கிற ஒரு பணியாக இருக்கிறது. உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் ரைடர்கள் மற்றும் ரசிகர்கள் சிறப்பான புதிய தரங்களை நிறுவுவார்கள். இந்த கணிசமான முதலீடு, இளம் இந்திய திறமையாளர்களுக்கு அவர்களின் அசாதாரண திறன்களை வெளிப்படுத்த ஒரு இணையற்ற சர்வதேச தளத்தை வழங்குவதற்கான எங்கள் அசைக்கமுடியாத உறுதியை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. அனைத்து சர்வதேச சூப்பர் கிராஸ் போட்டிகளிலும் எங்கள் லீக் தலை நிமிர்ந்து நிற்பதை உறுதி செய்யும் வகையில், இந்த நிதி உறுதியளிப்பு , அதிநவீன உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பங்களை உருவாக்க எங்களுக்கு அதிகாரம் அளிக்கும். இது ரசிகர்களை வசிகரிப்பது மட்டுமின்றி அடுத்த தலைமுறை ரைடர்களுக்கு ஊக்கமளிக்கும் மற்றும் விளையாட்டை முன்னோடியில்லாத உயரத்திற்கு உயர்த்தும் அனுபவத்தை வழங்குவதாகும்." என்று வலியுறுத்தினார்.

சூப்பர் கிராஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் இன் இணை நிறுவனர் மற்றும் இயக்குனர், திரு. ஈஷன் லோகாண்டே, மேலும், " இந்த சீயட் ஐ எஸ் ஆர் எல் ஆனது, இந்தியாவில் சூப்பர் கிராஸ் பந்தயத்தை உலக அரங்கிற்கு உயர்த்த தயாராக உள்ள ஒரு புரட்சிகர சக்தியாக இருக்கிறது. இந்த பரபரப்பான மற்றும் பதட்டமான விளையாட்டை நமது எல்லைகளுக்குள் வெளிக்காட்டுவது மட்டுமல்லாமல், சர்வதேச மோட்டார்ஸ்போர்ட்ஸ் ஆர்வலர்களுக்கான ஒரு முன்னணி இடமாக இந்தியாவை நிலைநிறுத்துவதும் எங்கள் நோக்கமாக இருக்கிறது. இந்த முதலீடு ஒரு அற்புதமான பயணத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது, மேலும் இந்த பரபரப்பான சாகசத்தில் எங்களுடன் சேர அனைவரையும் நாங்கள் வரவேற்கிறோம். இந்தியாவில் மோட்டார்ஸ்போர்ட்ஸ் இன் அபரிமிதமான சாத்தியம் உறுதியாக இருக்கிறது. அதனால்தான் உலகக் கோப்பையுடன் ஒன்றுடன் ஒன்று குறுக்கிடுவதைத் தவிர்ப்பதற்காக லீக் ஐ ஒரு மாதத்திற்கு மாற்றியமைக்க ஒரு கவனமான நடவடிக்கையை நாங்கள் எடுத்துள்ளோம். இந்த மூலோபாய மாற்றம், எங்கள் நிகழ்வு உண்மையிலேயே தகுதியான முழுமையான மற்றும் சிதறாத கவனத்தை பெறுவதை உறுதி செய்கிறது. சீயட் இந்தியன் சூப்பர் கிராஸ் ரேசிங் லீக் ஐ ஒரு உலகளாவிய உணர்வாகவும், நீடித்த தேசியப் பெருமைக்கான ஆதாரமாகவும், சர்வதேச மோட்டார் ஸ்போர்ட்ஸ் உலகில் ஒரு ஆதிக்கம் செலுத்தும் இருப்பை நிலைநிறுத்துவதே எங்கள் குறிக்கோளாக இருக்கிறது. "என்று கூறினார்.

சீயட் ஐ எஸ் ஆர் எல் இன் திட்ட அட்டவணையின்படி, டிசம்பர் 2023 இல் நடைபெற உள்ள இந்த லீக் அதன் முதல் சீசனுக்குத் தயாராகி வருகிறது. அக்டோபரில் சீசனைத் தொடங்குவதாக ஆரம்பத் திட்டம் இருந்தது, ஆனால் ஐசிசி கிரிக்கெட் உலகக் கோப்பையுடன் திட்டமிடல் முரண்பாட்டின் காரணமாக அது பின்னுக்குத் தள்ளவேண்டியிருந்தது. இந்த லீக் இன் முதல் சீசன் வெவ்வேறு இடங்களில் பந்தயங்களைக் கொண்டிருக்கும், மேலும் லீக் அடுத்த ஆண்டு சீசன் இரண்டில் 6 இடங்களுக்கு விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

ரைடர் பதிவுகள் திறக்கப்பட்டுள்ளன, மேலும் தற்போது, ஏற்கனவே பதிவு செய்துள்ள 75 ரைடர்கள் குழுவிலிருந்து குழுக்கள் உருவாக்கப்படும். இந்த லீக், அதன் தொடக்க சீசனில் 6 முதல் 8 அணிகளைக் கொண்டிருக்கும், மேலும் வரும் சீசன்களில் எண்ணிக்கையை 8 முதல் 10 அணிகளாக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த சீயட் ஐ எஆ ஆர் எல் ரைடர் குழுவில், மற்ற சர்வதேச ரைடர்கள் மத்தியில், தென்னாப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலிய சூப்பர் கிராஸ் சாம்பியன்கள், மற்ற சர்வதேச ரைடர்கள் உள்ளனர், இது ஒரு உண்மையான உலகளாவிய போட்டியாக இதை அமைக்கிறது. ரைடர்ஸ் மற்றும் அணிகளின் பெயர்கள் உள்ளிட்ட கூடுதல் விவரங்கள் வரவிருக்கும் வாரங்களில் அறிவிக்கப்படும்.

சீயட் இந்தியன் சூப்பர் கிராஸ் ரேசிங் லீக் இன் தொடக்க சீசன், படபடப்பான அதிரடி மற்றும் கடுமையான போட்டிக்கு உறுதியளிக்கிறது. இது, 450சிசி சர்வதேச ரைடர்ஸ் மட்டும், 250சிசி சர்வதேச ரைடர்ஸ் மட்டும், 250சிசி இந்தியா-ஆசியா கலவை மற்றும் 85சிசி ஜூனியர் கிளாஸ் ஆகிய நான்கு அற்புதமான பந்தயப் பிரிவுகளைக் கொண்டிருக்கும். இந்த லீக் இந்தியாவில், நாடு முழுவதும் உள்ள மோட்டார் ஸ்போர்ட்ஸ் ஆர்வலர்களின் கற்பனையை ஈர்க்கிற சூப்பர் கிராஸ் பந்தயத்தை மறுவரையறை செய்ய தயாராக உள்ளது.

ரைடர் பதிவு, பிளேயர் ஏலம் மற்றும் ஐ எஸ் ஆர் எல் சீசன் 1 அட்டவணை பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, <https://indiansupercrossleague.com/> இல் உள்ள அதிகாரப்பூர்வ எஸ் எக்ஸ் ஐ இணையதளத்தைப் பார்வையிடவும்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
புதன்கிழமை,
அக்டோபர் 04, 2023

# சென்னை புறநகர் மின்சார ரெயில்களில் ஏசி பெட்டிகள்: தெற்கு ரெயில்வே முடிவு



சென்னை, அக்டோபர் 04 2023: சென்னை புறநகர் மின்சார ரெயில்களில் விரைவில் ஏசி பெட்டிகளை இணைக்க தெற்கு ரெயில்வே முடிவு செய்துள்ளது.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்க மின்சார ரெயில் சேவை இயக்கப்பட்டு வருகிறது. தெற்கு ரெயில்வேயின் சென்னை ரெயில்வே கோட்டம் சார்பில், நாள்தோறும் 630-க்கும் மேற்பட்ட மின்சார ரெயில் சேவைகள் இயக்கப்படுகின்றன. இவற்றில் 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணம் செய்கின்றனர். மொத்தம் 14 பெட்டிகள் கொண்ட மின்சார ரெயிலில் பெண்களுக்கான தனி பெட்டிகள் மற்றும் முதல் வகுப்பு பெட்டிகள் உள்ளது. பயணிகளின் வசதிக்கு ஏற்றவாறு புதிய திட்டங்களையும் ரெயில்வே நிர்வாகம் அறிமுகம் செய்து வருகிறது. மேலும், மின்சார ரெயில்களில் ஏ.சி. பெட்டிகளை இணைத்து இயக்க வேண்டும் என தெற்கு ரெயில்வேக்கு பயணிகள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதேபோல, சென்னை புறநகர் மின்சார ரெயில்களில் பயணிகள் வசதிக்கு ஏ.சி. ரெயில் பெட்டியை இணைப்பது குறித்து ஆய்வு செய்யுமாறு சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் சார்பில் தெற்கு ரெயில்வேக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சென்னையில் மின்சார ரெயில்களில் 2 முதல் 3 ஏ.சி. பெட்டிகளை இணைத்து சோதனை முறையில் இயக்கிப்பார்க்க தெற்கு ரெயில்வே திட்டமிட்டுள்ளது. அடுத்த 6 மாதத்தில் இதற்கான சோதனை ஓட்ட நடவடிக்கைகள் தொடங்கும் எனவும் கூறப்படுகிறது.

மேலும், பெரம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த ரெயில் பெட்டி தொழிற்சாலையில் (ஐ.சி.எப்.) ஏற்கனவே மும்பை புறநகர் மின்சார ரெயிலுக்காக ஏ.சி. பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதனுடன், ஐ.சி.எப். மூலமாகவே சென்னை மின்சார ரெயில்களில் இணைப்பதற்கு தேவையான ஏ.சி. பெட்டிகளை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதல்கட்டமாக சென்னை கடற்கரை-தாம்பரம்-செங்கல்பட்டு வழித்தடத்தில் ஏ.சி. வசதி கொண்ட மின்சார ரெயில் பெட்டிகளை இயக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது . ஏ.சி.பெட்டிகள் இணைக்கப்படும் பட்சத்தில் அதற்கான கட்டணமும் அதிகமாக இருக்கும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆசிய விளையாட்டுப் போட்டி: இந்தியா 16 தங்கத்துடன் 71 பதக்கம்







ஹாங்சோ, அக்டோபர் 04 2023: 46 நாடுகள் பங்கேற்றுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 300 பதக்கங்களுடன் சீனா முதலிடத்தை பெற்றுள்ள நிலையில் 71 பதக்கங்களுடன் இந்தியா 4 வது இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெறும் 19 வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் 46 நாடுகள் பங்கேற்றுள்ளன. இந்திய அணி சார்பில் மொத்தம் 655 வீரர்கள் பங்கேற்றுள்ளனர். அக்டோபர் 8 ந்தேதி வரையில் 15 நாட்கள் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் 12 வது நாளில் மதியம் 1.30 மணி வரையில், இந்தியா 16 தங்கம், 26 வெள்ளி, 29 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 71 பதக்கங்களை வென்று, புள்ளிப் பட்டியலில் 4 வது இடத்தில் உள்ளது.

இந்த பட்டியலில் சீனா 164 தங்கப் பதக்கம், 90 வெள்ளி, 46 வெண்கலப் பதக்கம் என மொத்தம் 300 பதக்கங்களை வென்று, புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. ஜப்பான் 33 தங்கம், 48 வெள்ளி, 50 வெண்கலம் என மொத்தம் 131 பதக்கங்கள் வென்று 2 வது இடத்திற்கு முன்னேறிய நிலையில், தென்கொரியா 32 தங்கம், 43 வெள்ளி, 65 வெண்கலம் என 140 பதக்கங்கள் வென்று 3 வது இடத்தை பெற்றுள்ளது.

இந்தியா 71 பதக்கங்களுடன் 4 வது இடத்தில் உள்ள நிலையில், உஸ்பெக்கிஸ்தான் 14 தங்கம், 15 வெள்ளி, 21 வெண்கலம் என 50 பதக்கங்களுடன் 5 வது இடத்தில் உள்ளது. தைபே 12 தங்கம், 10 வெள்ளி, 19 வெண்கலம் என மொத்தம் 41 பதக்கங்கள் வென்று 6 வது இடத்தை பெற்றுள்ளது. தாய்லாந்து 10 தங்கம், 12 வெள்ளி, 20 வெண்கலம் என 42 பதங்கங்களுடன் 7 வது இடத்தையும், வடகொரியா 7 தங்கம், 10 வெள்ளி, 6 வெண்கலம் என 23 பதக்கங்களுடன் 8 இடத்தையும், பக்ரைன் 7 தங்கம், 1 வெள்ளி, 4 வெண்கலம் என 12 பதங்கங்களுடன் 9 வது இடத்தையும், ஹாங்காங் 6 தங்கம், 15 வெள்ளி, 25 வெண்கலம் என 46 பதக்கங்களுடன் 10 வது இடத்தையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# டிபிஎஸ் பேங்க் இந்தியா தனது தங்க நகைக் கடன்களை புதிய அம்சங்களுடன் மேம்படுத்துகிறது!

சென்னை, அக்டோபர் 04 2023: டிபிஎஸ் பேங்க் இந்தியா 'தங்க நகைக் கடன்களின் கோல்ட் ஸ்டாண்டர்ட்' என்ற நோக்கத்துடன், மதிப்பு கூட்டப்பட்ட அம்சங்களைக் கொண்ட டிபிஎஸ் தங்க நகைக் கடன் திட்டத்தை மேம்படுத்தியுள்ளது. 350-க்கும் மேற்பட்ட இடங்களில் 530-க்கும் கிளைகளின் தொடர் செயல்பாடுகளின் மூலம், தங்க நகைக் கடன் வணிகத்தில் வங்கி மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. மிகச் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தையும், குறிப்பாக தென்னிந்தியாவில் வேளாண் சமூகத்தில் அதிகரித்து வரும் தேவையின் காரணமாகவும் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

டிபிஎஸ் தங்க நகைக் கடன் வசதி தனிநபர் தேவைகளுக்காகவும், வணிக பயன்பாட்டிற்காகவும் தடையற்ற, இடையூறு இல்லாத வகையில் நிதி உதவியை அளிக்கிறது. டிபிஎஸ் வங்கியின் பல்வேறு வகையான கடன் செயல்பாடுகளில் இது முக்கிய இடம் வகிக்கின்றது. சம்பளம் பெறும் தொழில் வல்லுநர்கள், சுய தொழில் செய்யும் தனி நபர்கள், சிறிய வணிக உரிமையாளர்கள் உள்ளிட்ட பல்வேறு வாடிக்கையாளர் பிரிவுகளை ஈர்க்கும் வகையில் தங்கநகைக் கடன் வசதிகளை மேம்படுத்தி வருகிறது. வாடிக்கையாளர்கள் தங்களது தங்க நகைகளை எளிதில் அடகு வைத்து டிபிஎஸ் தங்க நகைக் கடன்களை கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களையும் உயர்ரகசேவையையும் பெறலாம். வேறு சில இடங்களில் இருக்கும் வெளிப்படைத்தன்மையற்ற தன்மைக்கு மாறாக, டிபிஸ் வங்கி ஒரு முழுமையான நம்பகத்தன்மை அளிக்கும் ஒரு அனுபவத்தை வழங்கும் உறுதி அளிக்கிறது. இந்தத் தன்மையினால் தான் குளோபல் பைனான்ஸ் அமைப்பின் "ஆசியாவின் மிகச் சிறந்த வங்கி" விருதை டிபிஸ் வங்கி 2009-2022 ஆண்டுகளுக்கு என 14 முறை பெற்றிருக்கிறது. இதைத் தவிர, பாலன்ஸ் ட்ரான்ஸ்ஃபர் என்ற புதிய வசதி மூலம், வாடிக்கையாளர்கள் வேறு நிதி நிறுவனங்களில் இருக்கும் தங்களுடையக் கடன்களின் தற்போதைய நிலுவைத் தொகையை டிபிஎஸ் வங்கி இந்தியா நிறுவனத்துக்கு மாற்றி, குறைந்த வட்டி மற்றும் செயல்முறை கட்டணத்தின் பயனைப் பெறலாம் . தற்போது, டிபிஎஸ் பேங்கி இந்தியாவின் தங்க நகைக் கடன் மதிப்பு ரூ6300 கோடியை கடந்துள்ளது. மேலும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்த மதிப்பினை இருமடங்காக அதிகரிக்க வங்கி திட்டமிட்டுள்ளது. தனிநபர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள டிபிஎஸ் தங்க நகைக் கடன்கள், வணிக நிறுவனங்களின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளை சமாளித்தல், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வாங்குதல் போன்ற வர்த்தகத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் ஏற்ற வகையில் விளங்குகிறது. தனிப்பட்ட முறையில் சிறந்த வாடிக்கையாளர் சேவை, 30 நிமிடங்களுக்குள் விரைவான கடன் வழங்கல்*, ஒவ்வொரு கிராம் தங்கத்துக்கும் அதிகபட்ச கடன் தொகைகள், டிபிஸ் வங்கி□ அளிக்கும் உலகத் தரத்திலான பாதுகாப்பு அம்சங்கள் போன்றவற்றை வழங்கி, 'தங்க நகைக் கடன்களில் கோல்ட் ஸ்டாண்டர்ட்' என்ற குறிக்கோளினை டிபிஸ் தங்கநகைக் கடன் அடைகிறது. மிகச் சிறந்த வட்டி விகிதங்களுடன், வாடிக்கையாளருக்கு குறைந்த பட்சம் ரூ.25,001 முதல் அதிகபட்சம் ரூ.50 லட்சம் வரை கடன் தொகை கிடைக்கும்.

டிபிஎஸ் பேங்க் இந்தியா நிறுவனத்தின் அசட்ஸ் அண்ட் ஸ்ராட்டஜிக் அலையன்ஸ், கண்ஸ்யூமர் பேங்கிங் குழுவின் தலைவரும் எம்டியுமான, சஜீஷ் பிள்ளை இந்தப் புதிய அம்சங்கள் குறித்து கூறுகையில், "இந்தியாவில் தங்க நகைக் கடன்கள் துறையில் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டு, பெரும்பாலும் நகர்ப்புறத்தில் அல்லது அதிகம் டிஜிட்டல் ஆர்வமுள்ள இளைய தலைமுறையினர், தங்களின் கடன் தேவைகளுக்காக அணுகும் நிறுவனங்களிடமிருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்க்கலாம் இது போன்ற பல்வேறு வகையான வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் எங்கள் வழங்கல்களை உருவாக்கி உள்ளோம். டிபிஎஸ் தங்க நகைக் கடன்கள் தனிநபர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் அவர்களுடைய நகைகளின் முழுமையான மதிப்பைப் பெற வழி வகுக்கிறது. வணிகங்களுக்கான அவசரத் தேவைகள் அல்லது குறுகியகால நிதித்தீர்வுகள் ஆகியவற்றை, விரைவான விநியோகம் மற்றும் சிறந்த வட்டி விகிதங்கள் உடன் வழங்கி பல்வேறு நிதித் தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்கிறோம். எங்களது விரிவான வங்கிக்கிளை அமைப்பும் , வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதில் எங்களுடைய அனுபவமும் டிபிஎஸ் பேங்க் இந்தியாவை தங்க நகைக் கடன்களுக்கான நம்பகமான நிறுவனமாக திகழச் செய்கிறது. எங்களுடைய மிகச் சிறந்த கடன்வசதித் தீர்வுகளும், சந்தையில் அதிகரித்து வரும் தேவைகளும் சேர்ந்து வரும் இந்நிலையில், அடுத்த சில ஆண்டுகளில் இந்த கடன் பிரிவை கணிசமாக அதிகரிக்கச் செய்ய நாங்கள் முழுமையாக தயார் நிலையில் உள்ளோம்" என்றார்.

டிபிஎஸ் பேங்க் இந்தியா ஆகஸ்ட் (2023) மாதம் முழுவதும் இந்த புதிய அம்சங்களை குறித்து முழுமையான விளம்பரப் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளது. விளம்பரக் காணொளியில் மூலம் , தங்க நகைக் கடன் பரிசோதனையை மேற்கொள்ளவும், 'தங்க நகைக் கடன்களில் கோல்ட் ஸ்டாண்டர்ட் கொண்ட டிபிஎஸ் தங்க நகைக் கடன்களையே தேர்வு செய்யவும் வாடிக்கையாளர்களை வங்கி அழைக்கிறது. தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகாவில் செய்தித்தாள் , டிஜிட்டல், வானொலி, திரைப்படம், மற்றும் வெளிப்புற ஊடகங்கள் மூலம் ஒரு மாத கால விளம்பரப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

# சிக்கிமில் திடீர் மேகவெடிப்பால் வெள்ளம்: 23 ராணுவ வீரர்கள் மாயம்

சென்னை, அக்டோபர் 04 2023: வடகிழக்கு மாநிலமான சிக்கிம்மில் உள்ள லாச்சென் பள்ளத்தாக்கில் இன்று காலை மேகவெடிப்பு காரணமாக டீஸ்டா ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் ராணுவ வாகனங்கள் நீரில் மூழ்கியதில் 23 ராணுவ வீரர்கள் மாயமாகி உள்ளனர்.

இது குறித்து குவாஹாட்டி ராணுவ மையத்தின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில் கூறி இருப்பதாவது:ருீ

சிக்கிம் மாநிலத்தின் லான்சன் பள்ளத்தாக்கில் இன்று காலை டீஸ்டா ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் ராணுவ வாகனங்கள் மூழ்கின. 23 ராணுவ வீரர்கள் மாயமான நிலையில், அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராணுவத்தினரை தேடும் பணி

சிங்டம் அருகே பர்டாங் எனும் பகுதியில் ராணுவ வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் திடீரென சுங்தங் அணையில் இருந்து நீர் வெளியேற்றப்பட்டது. இதனால் அப்பகுதியில் நீர்மட்டம் 15 முதல் 20 அடிக்கு உயர்ந்தது. இதில்தான் ராணுவ வாகனங்கள் மூழ்கியுள்ளன. சில வாகனங்கள் சேற்றில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மேகவெடிப்பு நிகழ்ந்தவுடன் சிக்கிம் முழுவதும் திடீர் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. திடீர் வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் முதல்வர் பிரேம் சிங் தமங் பாதிப்புகளை ஆய்வு செய்தார். இவை ஒருபுறம் இருக்க ராணுவ வீரர்களைத் தேடும் பணியும் நடந்து வருகிறது.

மேகவெடிப்பு என்பது, சாதாரணமாக மேகம் உருவாகும் நேரத்தை விட குறைந்த நேரத்தில் மழைமேகம் உருவாகி மணிக்கு 100 மில்லி மீட்டருக்கும் அதிகமான அளவு மழையை ஒரே இடத்தில் கொட்டித் தீர்ப்பதுதான் மேகவெடிப்பு. இந்த அதீத மழையால் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு முதலியன நிகழ்கிறது. கடந்த மாதம் இமாச்சலப் பிரதேசத்தில் மேகவெடிப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து நடந்த நிலச்சரிவில் 20-க்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எலெக்ட்ரிக் டெட்டனேட்டர் கருவிகளுக்கு 2025 இல் தடை



சென்னை, அக்டோபர் 04 2023: எலெக்ட்ரிக் டெட்டனேட்டர் கருவிகளுக்கு 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தடை விதிக்க இந்திய ஒன்றிய அரசு தீர்மானித்துள்ளது.

இதுகுறித்து மத்திய தொழில் மற்றும் உள்நாட்டு வாத்தக (டிபிஐஐடி) ஊக்குவிப்புத் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

எலெக்ட்ரிக் டெட்டனேட்டர் ஆபத்தான தன்மை கொண்டது என்று ஒன்றிய அரசு கருதுகிறது. பொதுப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, மின்சார டெட்டனேட்டரைத் தயாரிப்பது, வைத்திருப்பது மற்றும் இறக்குமதி செய்வது ஆகியவற்றைத் தடைசெய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வெடிபொருள் துறையினருடன் கலந்தாலோசித்த பிறகு, பொது நலன் கருதி, 2024-2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அதன் உற்பத்தி முற்றிலும் நிறுத்தப்படும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

எலெக்ட்ரிக் டெட்டனேட்டரின் உற்பத்தி, வைத்திருப்பது மற்றும் இறக்குமதியை மத்திய அரசு இதன் மூலம் தடை செய்கிறது. இது நாடு முழுவதும் ஏப்ரல் 1, 2025 முதல் எலெக்ட்ரிக் டெட்டனேட்டர் தடை நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.